MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Thondai Zone Thirupathigal

K. Kokila[1], Dr. S. Hemalatha[2]

Ph.D Research scholar[1], Assistant Professor, Tamil Studies and Higher Education[2], Chellammal College for Women's, Chennai, India

Manuscript ID : **MT127A0072**

Volume : **2**

Issue : **4**

Month : **December**

Year : **2022**

Received: 26.10.2022
Revised: 08.11.2022
Accepted: 22.11.2022
Published: 05.12.2022

Pages : 251-262

DOI: 10.5281/zenodo.7375324

ABSTRACT:

A journey of literature through the collection of essays titled Thondainadu thirupathikam. Vaishnavism is located in the Thondai mandalam & the author describes the conditions under which one can go face to face with the corrections and see the Lord in a state of ecstasy, as well as the history of the organizational platform of the Tirupatis who are to travel there, and any means of travel and time for the journey. Of the 108 Vaishnava Divya Desams, this book describes the Divya Desams located in the Thondai mandalam.

Not only this, with the help of fire you can do welding. The author has set up this book in such a way that not only the devotees of Saiva Roy visit the Vaishnava sites in person and the devotees melt into the Alvars in those places, but they also immerse the readers in this book in devotion and motivate them to visit the sites in person. This dissertation also sets out to illustrate the format of the author's travel literature essay and the author's devotional excellence in Vaishnava literature.

The manner in which it is taken, the sense of devotion with which they are immersed in the corrections, the introspective fields in his songs, and the love they have for the Lord can be discerned.

This article explores the travel literature form of the book, the author's devotion, and the author's deep understanding of Vaishnavism. The article also examines the merits of the Aanganke Attalas by comparing them with the opinions of other authors.

KEYWORDS:

Thondai Nadu, Samaiya Illakiyam, Thiruthalangal, Azhvaragal, Vainavim

தொண்டை மண்டலத் திருப்பதிகள்

கு. கோகிலா[1], முனைவர் செ. ஹேமலதா[2]
ஆய்வாளர்[1], உதவிப்பேராசிரியர், தமிழியல் மற்றும் உயராவுத்துறை[2]
செல்லம்மாள் மகளிர் கல்லூரி, சென்னை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

தொண்டை நாட்டு திருப்பதிகள் எனும் கட்டுரைத்தொகுப்பு ஒரு பயண இலக்கியம் ஆகும். தொண்டை மண்டலத்தில் அமைந்துள்ள வைணவத் திருத்தலங்களை நேரில் சென்று பக்தியால் மெய்மறந்து ஆழ்வார்களின் நிலையில் இறைவனை கண்டு போற்றிய நிலைகளையும் அங்கு பயணம் செய்ய ஏதுவான வழிகளையும் பயணத்திற்கான காலத்தையும் கூறி பயணம் செய்ய இருக்கும் திருப்பதிகளின் அமைப்பு தலத்தின் வரலாறு சிறப்பு போன்றவற்றையும் ஆசிரியர் விவரித்துள்ளார். 108 வைணவ திவ்ய தேசங்களில் தொண்டை மண்டலத்தில் அமைந்துள்ள திவ்ய தேசங்கள் பற்றி இந்நூல் விவரிக்கின்றது.

அத்திருத்தலங்களின் சிறப்புகளை மட்டுமல்ல சில தலங்களில் விளக்கேற்றவும் ஆள் இல்லை போன்ற தனது ஆதங்கத்தையும் வெளிக்காட்டியுள்ளார். ஆசிரியர் சைவராய் இருந்தும் வைணவத் தலங்களை நேரில் சென்று வணங்கியதும் அத்தலங்களில் ஆழ்வார்களின் நிலையில் பக்தராய் உருகியதும் மட்டுமன்று இந்நூலை படிப்பவர்களையும் பக்தியில் ஆழ்த்தும் விதமாகவும் அவர்களை அத்தலங்களுக்கு நேரில் சென்று தரிசிக்க தூண்டும் விதமாகவும் இந்நூலை ஆசிரியர் அமைத்துள்ளார்.

திருப்பதிகளை விவரிக்கும் இடங்களில் ஆழ்வார்களது பாடல்களை ஆங்காங்கே எடுத்துக்கூறும் விதமும், திருத்தலங்களில் ஆழ்வார்கள் கொண்ட பக்தி உணர்வையும், அவர் பாடல்களில் அகப்பொருள் துறைகளையும், இறைவனின் மீது அவர்கள் கொண்ட அன்பையும் அறியலாம்.

இந்நூலின் பயண இலக்கிய வடிவத்தையும் ஆசிரியரது பக்தி சிறப்பையும் வைண இலக்கியங்களில் ஆசிரியர் ஆழங்கால் பட்டவர் என்பதையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது. மேலும் ஆங்காங்கே அத்தலங்களின் சிறப்புகளை பிற ஆசிரியர்களின் கருத்துக்களைக் கொண்டு ஒப்பிட்டு ஆய்வதாகவும் இக்கட்டுரை ஆய்கிறது.

கருச்சொற்கள்

தொண்டை நாடு, சமய இலக்கியம், திருத்தலங்கள், ஆழ்வார்கள், வைணவம்

முன்னுரை

தொண்டை நாடு தொண்டுகள் பல நிறைந்த நாடு. தொண்டை நாடு என்றாலே வரலாறு சிறப்புமிக்க இடமாக சங்ககாலம் முதல் இன்று வரை தனித்து பெருமையுடன் காணப்படுகின்றது. தொண்டை என்பது ஒரு வகையான கொடி என்பர். தொண்டை கொடியை சுற்றி பிறந்ததால் தொண்டைமான் என வழங்கப்பெற்றது. பன்னிரு ஆழ்வார்களும் பெருமாளைப் பற்றி சிறப்புகளை பாடியுள்ளார்கள். பல்லவர்கள் காலத்தில் கோயில்களில் மிகவும் சிறப்பு பெற்றிருந்ததை தெரியவருகின்றது. பல்லவர்கள் காலத்தில் தான் கோயில்களின் சிலையானது அழியாமல் நிலைத்து நின்றது.

வைணவ திருப்பதிகளின் பெருமை

திருமாலின் திருப்பதிகள் மொத்தம் நூற்று எட்டாகும். திருப்பதிகளே வைணவ திவ்ய தேசங்கள் என்றழைக்கப்படுகின்றன. திருமாலின் இந்த நூற்று எட்டு திருப்பதிகளில் எழுந்து அருள் புரிந்த நம்மை காத்து வருகின்றார் எம்பெருமான். மக்களுக்கு தண்ணீர் தாகம் எடுக்கும் போது நீரை உட்கொண்டு தாகத்தை தீர்த்து நிம்மதி அடைவர். அதுபோல பெருமானை வணங்கினால் தாகத்தை தணிக்கும் நீர்போல் அவர்களுடைய குறையை நீக்குவார் என்று மக்கள் நம்பிக்கைக் கொண்டுள்ளனர்.

பொய்கையாழ்வாரும் சீத்தலைச் சாத்தனாரும் மக்கள் எம்பெருமானை எழுந்தருளி மக்களுக்கு அருள் சுரந்து தான் “பேரருளாளன்” என்பதை நிரூபித்து வருகின்றான் என்பதை “தமருகந்தது எவ்வுருதும் அவ்வுருவம் தானே”[1] என்று பாடி மகிழ்கின்றனர்.

> **“மண்ணினும் கல்லினும் மரத்தினும் - நண்ணிய**
> **தெய்வதம் காட்டுநர் வகுக்க - ஆங்குஅத்**
> **தெய்வதம் அவ்விடம் நீங்கா”[2]** **(செந்தமிழ் திங்கள் இதழ்)**

சங்க கால மக்கள் மண்ணால் பொருட்களை செய்தனர். சுடுமணலில் சுட்டு எடுத்த பாத்திரங்களை செய்தனர். அவைகள் நிலைத்து நிற்க கல்லில் செதுக்கி வைத்தனர். அவர்களுக்குப் பின் வரும் சந்ததியினற்கு பாறைக் கற்களைக் குடைந்து தெய்வ உருவங்களை செதுக்கினர். இச்செய்திகள் நூல்களின் வாயிலாக நமக்கு எடுத்துரைதுள்ளனர். இதனை மணிமேகலை என்னும் நூலில் உள்ள பாடலின் வாயிலாக அறிய முடிகின்றது. தெய்வம் பிறந்த கதையை இதன் மூலம் அறியலாம்.

தொண்டை நாடு

தொண்டை நாடு என்றவுடன் அந்நாட்டை ஆண்ட பல்லவர்களும் அவர்களின் தலைநகரம் காஞ்சியும் நினைவுக்கு வரும். தொண்டை மண்டலம் என்பது வடக்கில் வேங்கடம், தெற்கில் தென்பெண்ணையாறு, கிழக்கில் வங்கக்கடல், மேற்கில் பவளமலை ஆகியவற்றை எல்லையாக கொண்டது என்பதை பெருந்தொகை பாடல் ஒன்று கீழ்க்கண்டவாறு விளக்குகிறது.

மேற்குப் பவளமலை வேங்கடம் நேர் வடக்காம்
ஆர்க்கு முவரி யணிகிழக்கும் - பார்க்குளுயர்
தெற்குப் பினாகி திகழிருபதன் காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு (பெருந்தொகை 2102)

இதன் மூலம் தொண்டை நாட்டின் எல்லைகளை அறிய முடிகின்றது. மேலும் தொண்டை நாட்டின் சிறந்த நகரமாம் காஞ்சிபுரத்தில் வைணவ திவ்ய தேசங்களில் 15 திவ்ய தேசங்கள் அமைந்துள்ளன. அப்பதினைந்து திவ்ய தேசங்களையும் மேலும் தொண்டை நாட்டின் பிற பகுதியில் அமைந்துள்ள 7 திவ்ய தேசங்களையும் நடுநாட்டில் அமைந்துள்ள 2 திவ்ய தேசங்களையும் விவரித்து பேராசிரியர்கள் இந்நூலில் எழுதியுள்ளார்கள்.

திருப்பதி - பெயர்காரணம்

திருப்பதியை திரு + பதி எனப் பிரிக்கலாம். திரு என்பது அடைமொழி பதி என்பது ஊர் அல்லது தலம் எனப் பொருள்படும். தொண்டை நாட்டு திருப்பதிகள் என்பது தொண்டை நாட்டில் அமைந்துள்ளத் திருத்தலங்களை குறித்து அமைந்தது என கொள்ளலாம்.

மற்றொரு பொருளிலும் இதை கூறலாம். திரு என்பது லக்ஷ்மியின் பெயர். பதி என்பது கணவனைக் குறிக்கும். இவ்வாறு பொருள் கொண்டால் இலக்குமியின் கணவனான திருமால் என்று பொருள் கொள்ளலாம். இலக்குமியின் கணவனான திருமால் வீற்றிருக்கும் தலங்களைப் பற்றியது எனவும் கொள்ளலாம். திருக்கோவலூர் என்னும் ஓர் அழகான ஊரைத் தான் திருப்பதி என்று கூறுகின்றார்கள். நீர்வளத்தினையும், நிலவளத்தினையும் உடைய ஊர் என்று வரைந்துள்னர். இதனால் திருப்பதி என்பது செல்வ வளம் நிறைந்த ஊர்கள் என்று பொருள் கொள்வதே சாலப் பொருத்தம் உடையது.

வைணவமும் திவ்ய தேசங்களும்

திருமாலை முழு முதற்கடவுளாக கொண்ட சமயம் வைணவம் ஆகும். வைணவத்தில் திருமால் எழுந்திருக்கும் சிறப்பான தலங்களை திவ்ய தேசங்கள் என்று அழைக்கின்றனர். மொத்தம் உள்ள 108 திவ்ய தேசங்களில் இருபத்திரண்டு திவ்ய தேசங்கள் தொண்டை மண்டலத்தில் அமைந்துள்ளன. அந்த 22 திவ்ய தேசங்களையும் பேராசிரியர்கள் அவர்கள் நேரில் சென்று இறைவனை வணங்கி தான் பெற்ற இன்பத்தை பிறரும் பெறும்படி இந்நூலை எழுதியுள்ளார். பேராசிரியர்கள் அவர்கள் தாம் பயணித்த தலங்களின் தோற்றம் அதன் அமைவிடம் அத்தலத்தை அடைய ஏதுவான போக்குவரத்து வசதிகள் மற்றும் அத்தலத்தின் புராணம் ஆகியவற்றை மட்டும் விவரிக்காமல் அத்தலத்தைப் பற்றி ஆழ்வார்கள் பாடிய பாடல்களையும் அப்பாடலை நினைவு கூர்ந்து தாம் பெற்ற மகிழ்ச்சியையும் படிப்பவர்கள் பெறும்படி இந்நூலை எழுதியுள்ளார்.

கடிகையில் நரசிம்ம பெருமான்

கடிகை மலையை எடுத்து கொண்டால் திருகடிகை மலைக்கு வந்து செல்லாதவர்களே இல்லை என்று கூறலாம். கடிகை என்பது ஒரு நொடிப்பொழுது நரசிம்மனை தரிசனம் செய்து செல்வது என்று கூறுவார்கள். கடிகை மலையானது மிக பழம்பெரும் மலையாக அமைந்துள்ளது. விசுவாமித்திரர் கடிகை மலைக்கு வந்து ஒரு நொடிப்பொழுது நரசிம்மனை தரிசனம் செய்து சென்றுள்ளார் என்று பல நூல்கள் வாயிலாக தெரிகின்றது. இதனை தொடர்ந்து பலர் கடிகை மலைக்கு சென்று இருக்கின்றார்கள்.

யோக நரசிம்ம சுவாமி பெருமாள் திருக்கோயில்

புகழ் பெற்ற நரசிம்ம கோயில் ராணிப்பேட்டை மாவட்டத்தில் அரக்கோணத்திற்கு அருகே அமைந்துள்ளது. கடிகாசலம் என்ற சோளிங்கர் கோயில் அமைந்துள்ளது. இது வரலாற்று சிறப்பு மிக்க இடமாக அமைந்துள்ளது. கடிகாசலம் என்ற பெயரிலிருந்து கடிகை மலை, திருக்கடிகை மலை, சோழசிம்மபுரம், சோழசிங்கபுரம், சோளிங்கர் என பல பெயர்கள் கொண்டது இந்த நரசிம்ம கோயிலாகும். ஆழ்வார்கள், புலவர்கள், கவிஞர்கள், அறிஞர்கள், பேராசிரியர்கள் போன்ற பலர் நரசிம்ம பெருமானைபற்றி பாடியுள்ளனர். இந்த கோயிலின் சிறப்பானது ஆஞ்சநேயர் கோயிலானது நரசிம்ம பெருமானை வணங்கி நின்ற நிலையில் காட்சியளிக்கின்றது.

நரசிம்ம அவதாரம் என்பது பத்து அவதாரத்தில் நான்காவது அவதாரமாக காட்சியளிக்கின்றது. இது நரசிம்ம கோயிலின் சிறப்பினை அழகுற எடுத்துரைக்கின்றனது. ஒரு குழந்தை பிறப்பு முதல் நடக்கும் வரை பத்து விதமான

அவதாரத்தை எடுத்து உரைக்கின்றது. அதில் நரசிம்ம அவதாரம் எட்டாவது மாதக் குழந்தையை பற்றி விவரிக்கிறது.

நரசிம்ம அவதாரமானது ஒரு குழந்தையின் நிலையில் இருந்து பார்த்தால் அந்த குழந்தை பிறந்து, தவழ்ந்து, எழுந்து, நிற்கும் நிலையினை விளக்குகிறது. ஒரு குழந்தையை எட்டாவது மாதத்தில் கவனமாக பார்க்க வேண்டும் என்பதை நரசிம்ம அவதாரத்தின் மூலமாக நமக்கு தெரிகின்றது. ஒரு குழந்தை எட்டாவது மாதத்தில் எழுந்து நின்று கொண்ட நிலையில் அந்த குழந்தை எதை கண்டாலும் எடுத்து வாயில் போட்டு கொள்ளும் அதே சமையம் எந்த ஒரு பொருள் கிடைத்தாலும் கிழித்து எரிந்துவிடும் இந்த நிலையினை நரசிம்ம அவதாரத்துடன் ஒப்பிட்டு பார்க்கப்படுகின்றது.

நரசிம்ம பெருமானை கானாது மனம் உருகிப் பல காலம் நரசிம்ம பெருமானை நினைத்து பூஜித்து தன் பாதங்களின் மூலமாக ஆடி ஆடி பெருமானை காண நினைத்து மனம் உருகி, அழுது, புலம்பி பெருமானை காண வேண்டும் என்று பராங்கு நாயகி பாடிய பாடல் ஆகும்.

ஆடியாடி யகம் கரைந்து இசை
பாடிப் பாடிக் கண்ணீமல்கி, எங்கும்
நாடி நாடி நரசிக்கா வென்று
வாடி வாடுமிவ் வாணுதலே **(நம்மாழ்வார் திருமொழி** 2-4-1)

பராங்கு நாயகியானவள் நரசிம்ம பெருமானை காணவேண்டும் என்று மணம் உருகி தன்னுடைய கால்களினால் ஆடி ஆடி அகம் கரைது இசையைப் பாடி பாடி கண்ணீரில் மூழ்கி, உலங்கெங்கும் நாடி நாடி நரசிம்மனை காணது அவளுடைய மனமானது வாடுகின்றது.

திரு. ந. சுப்புரெட்டியின் கடிகை வளம்

திரு ந. சுப்புரெட்டி கடிகை மலையினை தன்னுடைய கள ஆய்வு மூலம் கண்ட காட்சியினை நூலில் எடுத்துரைத்துள்ளார். கடிகை மலையின் வரலாற்றையும், மலையின் சிறப்புகளையும், நரசிம்மப் பெருமானின் புராண வரலாற்றையும் ஆழ்வார்கள் பாடிய திருப்பதிகம் பற்றியும் எடுத்துரைத்துள்ளார் ந. சுப்புரெட்டியார். அவர் சென்ற பாதையும் அங்கு கேட்ட செய்திகளையும் வரலாற்று ரீதியாக உள்ள நிகழ்வுகளையும் எடுத்துரைத்துள்ளார். அதில் சிலவற்றை காண உள்ளோம்.

நரசிம்ம பெருமானின் திரு தலத்திற்கு செல்லும் படிநிலையினை எடுத்துரைத்துள்ளார். நரசிம்ம பெருமானின் கோயிலுக்கு செல்லும் படியினை கட்டியவர் “ராயாஜி என்பவரால் மலைமேலுள்ள கோயிலுக்கு படிக்கட்டுகள்

அமைக்கப்பெற்றன"[3] என்று பேராசிரியர் கூறுகின்றார். சோழசிம்மபுரத்தில் நடக்கும் திருவிழாக்களையும் கூறியுள்ளார். ஆழ்வார் பாடிய திருநாமம் 'தக்கான்' என்பதும் 'அக்காரனி' பெயர்கள் கொண்டு பாடப்பட்ட திருப்பதிகம் ஆகும். நரசிம்ம பெருமானை நம்மாழ்வார் பாடிய பாசுரங்களைக் கொண்டு மாங்களாசானம் செய்கின்றனர். சோளிங்கர் மலை மருத்துவ குணம் நிறைந்தாக திரு. ந. சுப்புரெட்டியார் கூறியுள்ளார். அங்கு வரும் பெண்களுக்கு பேய் பிடித்திருந்தால் நரசிம்ம பெருமானின் குளத்தில் நீராடினால் அவர்களுக்கு பிடித்த பேயானது விளகிவிடும் என்று கூறப்பட்டுள்ளது. உடல் நிலை சரியில்லை என்றால் ஆஞ்சநேயர் கோயிலில் இருந்து மருந்து சாப்பிட்டு உறங்கி சென்றால் உடல் குணமடைந்து விடும் என்று நம்பிக்கை கொண்டுள்ளனர்.

சோளிங்கர் என்னும் ஊரில் இரண்டு ஆச்சாரியர்கள் வாழ்ந்துள்ளனர் என்று திரு. ந. சுப்புரெட்டியார் கூறியுள்ளார். அதில் ஒருவர் வரதாச்சாரியார். அவர் எறும்பி என்ற ஊரில் பிறந்தவர். அவரை அப்பா என்று அங்குள்ள மக்கள் கூறுவார்கள். அதனால் அந்த ஊருக்கு எறும்பியப்பா என்று பெயர் மாற்றம் மடைந்ததை காணமுடிகின்றது. தொட்டையாச்சாரியர் என்பவர் பத்தாம் நூற்றாண்டில் பிறந்தவர் இவருடைய புதல்வன் தேவராச்சாரியர் தேவராச்சாரியரின் குமரர் குமரபெரியபங்கார். இவர் பதினைந்தாம் நூற்றாண்டில் பிறந்தவர் ஐவர் 'வையம் கண்ட காஞ்சித் திருநாள்' என்று பெரும் புகழைப்பெற்றார். ஒவ்வொரு வைகாசித் திருநாளுக்குச் சென்று தரிசனம் செய்வது இவருக்கு வழக்கம். அந்த ஆண்டு பல சூழல் காரணமாக செல்ல முடியவில்லை. அதனால் திருநாளின் மூன்றாவது நாள் அன்று கருடசேவை நடக்கும். ஆனால் தொட்டையாச்சாரியாரால் செல்ல இயலவில்லை. இவர் பெருமானை நினைத்து சோளிங்கர் மலையில் உள்ள குலத்தில் நின்று கருடபெருமானை வணங்கியதாக கூறப்பட்டுள்ளது.

சீர் அருளால் நம்மைத் திருத்தி, நாம் முன்அறியாக்
கூர் அறிவும் தந்து, அடிமை கொண்டதற்கே நேரே
ஒருகடிகை யும், மனமே! உள்ளுகிலாய் - முத்தி
தருகடிகை மாயவனைத் தான் (அய்யங்கார்)

திரு தலத்தினை முடித்துவிட்டு அய்யங்கார் பாடலுடன் பாடலை பாடி முடித்துள்ளார்.

திருக்குறளில் எம்பெருமானை பற்றிய செய்திகள் களவியலில் புணர்ச்சி மகிழ்தல் என்னும் அதிகாரத்தில் அமைந்துள்ளது. பெருமானின் சிறப்புகளை வள்ளுவர் காலத்திலும் அமைந்துள்ளதை இந்த நூல்களின் மூலமாக தெரியவருகின்றது.

"யாம்வீழ்வார் மென்றோட் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு."[4] (குறள் 1103)

உலகளந்த பெருமாள்

வாமனனாய் குள்ள அந்தணர் வேடத்தில் மகாபலியிடம் தன் சிறு பாதங்களால் மூன்றடி மண் கேட்டு பேருருவாய் பூமியை ஒரு அடியாலும், வானத்தை மற்றொரு அடியாலும் அளந்து பலியிடம் மூன்றாவது அடி எங்கே வைப்பது என்றவுடன் பலிச்சக்கரவர்த்தியானவன் தன் தலையை காட்ட அவன் தலைமீது மற்றொரு அடியை வைத்து பாதாளத்தில் அழுத்தியவன் உலகளந்தன். அதனால் மகாபலி சக்கரவர்த்தி ஆனவன் பாதாள லோகத்தின் அரசனானான்.

ஆண்டாள் ஆனவள் திருப்பாவையில் "ஓங்கி உலகளந்த உத்தமன்" எனப் பாடுகின்றாள்.

1. நீர் பள்ளத்தை நோக்கித் தானே இயல்பாகப் பாயும்; மேட்டில் ஏறுவது அருமை, எம்பெருமான் சாதி முதலியவற்றால் குறைந்த நிலையையுடையாரிடத்தில் எளிதாகச் செல்லுவன்; உயர்ந்தோம் என்று மார்பு நெறித்திருப்பாரிடத்துச் செல்ல விரும்பாதவன். எம்பெருமான் பாண்டவர்கட்காகக் கழுத்திலே ஓலை கட்டித் தூது சென்ற பொழுது 'ஞானத்தால் சிறந்தோம்' என்றிருந்த வீட்டுமனின் இருப்பிடம் செல்ல விரும்பவில்லை. 'குலத்தால் சிறந்தோம்' என்று கருதியிருந்த துரோணரின் இல்லத்திற்குப் போக நினைக்கவில்லை. செல்வச் செருக்குடன் திகழ்ந்த துரியோதனையும் ஒரு பொருளாக மதித்து அவனுடைய மாளிகைக்கும் செல்ல ஒருப்படவில்லை. எல்லாவற்றிலும் தாழ்ந்தவராக நினைத்திருந்த விதுரனுடைய திருமாளிகைக்குத் தானாகவே சென்று "என்ன மாதவம் செய்ததோ இச்சிறு குடில்?" என்று அவன் போற்றும் வண்ணம் திருவமுது செய்தருளினான்.
2. நீர் சுட்டாலும் அதனை ஆற்றுவதற்கு நீரே தேவை. எம்பெருமான் சீறினாலும் அவனால்தான் அச்சீற்றம் தணிதல்வேண்டும் "தருதுயரம் தடாயேல் உன் சரண் அல்லால் சரண் இல்லை" என்று குலசேகரப் பெருமாள் அருளியுள்ளதைக் காண்க.
3. நீர் சிறிது துவாரம் இருப்பினும் உள்புகுந்து விடும். எம்பெருமானும் ஏதாவது ஒரு சிறு காரணத்தைப் பற்றாசாகக் கொண்டு நம்மை ஆட்கொள்ளுவான். "திருமாலிருஞ்சோலை மலை என்றேன்; என்னத் திருமால் வந்து என் நெஞ்சு நிறையப் புகுந்தான்"[5]
4. யாதொரு வேற்றுமையுமின்றி எல்லோரும் ஒரு துறையிலே படித்து குடைந்தாடலாம்படி இருப்பது நீர். எம்பெருமானும் பெரியார் சிறியார் என்னும் வேற்றுமையின்றி எல்லோரும் அடையத்தக்கவனாக இருப்பவன்.

ஆண்டாள் அருட்பாவையில் உலகளந்த பெருமான் நூல்களில் அழகுற எடுத்துரைத்துள்ளனர்.

திருவள்ளூவர் கோயில்

திரு எவ்வுள்ளூர் என்பது மாறி திருவெள்ளூர் என்று திரிந்து பிறகு திருவள்ளூர் என பெயர் மாற்றம் அடைந்தது. இங்கு பெருமானின் சிலையானது பள்ளிக்கொண்டார் போல் இருக்கும். இதனுடைய வரலாற்றை புராணக் கதைகளை சொல்லி பெருமாள் நிலைக்கொண்ட கதையினை எடுத்துரைக்கின்றார். சாலி என்பவர் பெருமானை கடும் தவம் புரிந்து பெருமானின் அருளைப் பெற்றதாக இந்த நூலில் கூறியுள்ளார்.

"நண்ணினம் நாராயணனை
நாமங்கள் பல சொல்லி
மண்ணுலகம் தருவானாய்
வாட்டாற்றான் வந்தின்று
விண்ணுலகம் தருவானாய்
விரைகின்றான் விதிவைகையே
எண்ணினவா றாகாஇக்
கருமங்கள் என்நெஞ்சே!"[6] (10-6-3 **திருவாய் மொழி**)

பெருமாளின் நாமங்களை சொல்லி சாலி என்பவர் கடும் தவம் புரிந்துள்ளார். தவத்தின் பயனாக பெருமாள் வயதான முதியவர் போல் காட்சியளித்து அவர் செய்த தொண்டுகளில் மனம் உருகி உண்மையான தோற்றத்தினை அந்த இடத்திலேயே பள்ளிக்கொண்டார் போல் சாலிக்கு தரிசனம் அளித்தார்.

திருவள்ளூர் கோயில் மிகவும் சிறப்புமிக்கதாக அமைந்துள்ளது. திருவள்ளூர் அருகிலே இருக்கும் சுப்பாரெட்டிபாளையம் என்னும் ஊரில் புதிதாக கிடைத்துள்ள பெருமானுடைய மருவுருவமான விஷ்ணு சிலைக் கிடைத்துள்ளது என்று தொல்லியல் அகழ்வாய்வு மூலமாக தெரிய வருகின்றது. இதனுடைய உயரம் சுமார் "திருவள்ளூர் என்னும் ஊரிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. 87 செ.மீ உயரம் 41 செ.மீ அகலமும் உள்ளது".[7] பேராசிரியரும் வைணவமும் பேராசிரியர் அவர்கள் சைவ சமயத்தை சார்ந்தவர். ஆனால் வைணவத்தின்மீது அவர் கொண்ட ஈடுபாடு ஆழ்வார்களின் பாடல்களில் அவரை ஆழங்கால் பட வைத்தது. இதனை இந்நூலின் வழியாகவே நாம் அறியலாம்.

ஆழ்வார்கள் என்று வேறு பெயர் உண்டு. ஆனால் சிறப்பு பெற்ற பெயராக கருதப்படுவது ஆழ்வார் என்று கூறப்படுகின்றனர். ஒவ்வொரு காலத்திற்கும் ஏற்றார் போல் ஆழ்வார்கள் காணப்படுகின்றனர். "ஆழ்வார்களுக்கு என்று வேறு சிறப்பு பெயர்கள் உண்டு. அவை '**திவ்ய சூரிகள்**', '**பிரபந்தர்**', '**ஆதி பக்தர்**', '**மாலுகந்த ஆசிரியர்**', '**பாலேய் தமிழர்**', '**பொய்யில் புலவர்' என ஆழ்வார்களின் பெயர் சிறப்பிக்கப்படுகின்றது**"[8]. ஆழ்வார்களின் பெயருக்கு மிக சிறப்பு உண்டு என்பதை அறியமுடிகின்றது. இறைவனை என்று மறவாது தொழுது நிற்பதே ஆழ்வார்களின் சிறப்பாக கருதப்படுகின்றது. ஆழ்வார்கள் என்றாலே ஆழ்ந்து சிந்தனை செய்பவர்கள் என்றும் பெருள்படலாம் ஆழ் + வார் ஆழ்ந்து சிந்தித்தலேயாகும். ஆழ்வார் என்ற சொல்லிற்கு இறைவனுடைய குணங்களில் ஆழ்ந்து ஈடுபடுவர்கள் என்று பொருள். பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவர் மதுரகவியாழ்வார் இவர் தன்னுடைய ஆசான் ஆன நம்மாழ்வாரையே சிறந்த தெய்வமாக எண்ணி பதினொரு பாசுரங்களைப் பாடியுள்ளார். "ஆழ்வார்கள் வாழி அருளிச் செயல் வாழி தாழ்வாதுமில் குரவர் தாம் வாழி - ஏழ்பாளும் உள்ளு அவர்கள் உரைத்தவகள் தாம் வாழி. செய்யமறை தன்னுடனே சேர்ந்து"[9].

ஆழ்வார்களை போற்றும் விதத்தில் இந்த பாடலானது அமைந்துள்ளது. ஆழ்வார்கள் அருளிச் செய்த திவ்யப் பிரபந்தங்களை வாழ்க வாழ்கவே என்றும் எந்த நிலையிலும் கர்வம் கொள்ளாமல் வாழ்கின்றவர்களே ஆழ்வார்கள் என்றும் வாழியவே என்றும் ஏழுலகத்தில் உள்ள மக்களுக்கும் உணர்த்தும் படியாக ஆழ்வார்கள் அருளிச் செய்த சுருக்கமாக உள்ளவற்றை நன்கு, பொருள் புரியும்படி விரிவாக எடுத்து விளக்குதல் சாத்திரக் கருத்துக்களின் மிக ஆழமான பொருள் செம்மையான விளக்கத்துடன் ஆழ்வார்கள் மக்களுக்கு புரியும் வகையில் எடுத்துரைக்கின்றனர்.

ஒவ்வொரு திருதலத்திற்கும் அவர் செல்லும் பொழுது அத்திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள பெருமாளை ஆழ்வார்கள் பாடிய பாடல்களோடு ஒப்பிட்டு இறைவனை நம் கண் முன்னால் காணவைக்கின்றார். இதன் மூலம் அவர் ஆழ்வார் பாடல்களில் ஆழங்கால் பட்ட தன்மையையும் வைணவத்தின் மீது கொண்ட ஈடுபாட்டையும் நமக்கு எடுத்துரைக்கின்றது.

பேராசிரியரின் ஆழ்வாரும்

பேராசிரியர் ஆழ்வார்களின் பாடல்களை நினைவு கூறும் இடங்களில் தானும் ஆழ்வார் ஆகவே மாறிவிடுகிறார் எனலாம். ஏனெனில் ஆழ்வார்கள் என்றால் பக்தியில் ஆழ்ந்து போகிறவர்கள் என்று பொருள் கூறுவர் சான்றோர்கள். அவ்வாறு நோக்குமிடத்து பேராசிரியர் அவர்களும் ஆழ்வார்களின் பாடல்களை ஒவ்வொரு திருத்தலத்திலும் நினைவு கூறும் இடங்களில் தானும் பக்தியில் ஆழ்ந்து ஆழ்வார் ஆகவே மாறிவிடுகிறார் எனலாம்.

அட்டபுயகரத்தான் கோவிலை பேராசிரியர் அவர்கள் கண்டு வணங்கும் போது ஒரு பாடலை நினைவு கூர்ந்து **"இங்ஙனம் சிந்திக்கின்றோம். திருவிட எந்தையைச் சேவிக்க வந்தபொழுது முகங்காட்டாமல் ஆழ்வார் நாயகியைத் துடிக்கவிட்ட நிலையை எண்ணுகின்றோம். அவள் பட்டபாடுகளைத் திருவுள்ளம் பற்றின எம்பெருமான் இந்தத் திருப்பதியில் ஆழ்வார் நாயகிக்கும் பரம போக்கியமாகச் சேவை சாதித்த நிலையையும் சிந்திக்கின்றோம். பரகாலநாயகி உறக்கம் வராமல் எம்பெருமானை நினைத்த வண்ணம் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள். அவள் ஊனக்கண் முன்னே"**, இதன்மூலம் பேராசிரியரின் பக்தியின் சிறப்பை உணரலாம்.

நீர்மலை நீர்வண்ணன்

"மின்இலங்கு திருவுருவும், பெரிய தோளும்
கரிமுனிந்த கைத்தலமும், கண்ணும், வாயும்,
தன்அலர்ந்த நறுந்துழாய் மலரின் கீழே
தாழ்ந்துஇலங்கு மகரம்சேர் குழையும் காட்டி" **(திருநெடுந்தொகை - 25)**

நிற்கும் எம்பெருமானை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. அறிந்து கொள்ளாமல் இருக்கவும் மனம் வரவில்லை. சொந்த அறிவு அவளது ஆராய்ச்சிக்கு துணை செய்யவில்லை. யார் என்று வினவவும் வாய் செயற்படவில்லை. அவர் திருமுகத்தை நேரே பார்த்துப் பேச முடியாதபடி சோதி வெள்ளம் அலையெறிந்து தள்ளுகின்றது. அதனால் முகம் நோக்கி வாய் எழும்ப முடியாத நிலை ஏற்பட்டுவிடுகின்றது அவளுக்கு. இவர் நம் தலைவராகவே தோன்றினமையால் வினவமுடியாத நாணம் இவளை ஆட்கொண்டு விடுகின்றது. இன்னாரெனத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற அவாவோ அதிகரித்துவிடுகின்றது. இந்நிலையில் அருகிலிருக்கும் வேறொருவரை நோக்கி இப்பெரியார் யார்? என்று வினவுகின்றாள். அதற்கு எம்பெருமானே நான் அட்டபுயத்தகரத்தேன் என்று மறுமொழி கூறுகின்றான். எம்பெருமானே வினாடிக்கு வினாடி தன் திருக்கோலத்தை மாற்றி மாற்றிக் காட்சி அருள்கின்றான். அதனால் இவளுடைய வினாவும் மாறி மாறித் தொடுக்கப் பெறுகின்றது. எல்லா வினாக்கட்கும் எம்பெருமானே நான் அட்டபுயகரத்தேன் என்றே விடைதருகின்றான் என்ற பாடலை நம் கண்முன்னே விவரிக்கின்றார். இதன்மூலம் அவர் வைணவ இலக்கியங்களில் ஆழங்கால் பட்ட தன்மை, பக்தி உணர்வு, அகத்துறைகளை எடுத்தாளும் விதம் ஆகியவற்றை எடுத்துக்கூறி பக்தியில் ஆழ்ந்து ஆழ்வாராகவே மாறிவிடுவதை அறியலாம்.

எம்பெருமான் எண்ணற்ற கல்யாண குணங்களையுடையவன் என்பது வைணவர்களின் கொள்கை. ஒரு மனிதனுக்கு தேவையான குணங்கள் நான்கும் இருப்பின் அவன் இறைவனுடைய அருள் பெற்றவனாக இருக்கின்றான் என்று நீர்மலை

நீர்வண்ணன் என்னும் கட்டுரை நமக்கு எடுத்துரைக்கின்றது. அந்த நான்கு குணங்களும் வாத்சல்யம், சுவாமித்துவம், சௌசீல்யம், சௌலப்பியம், ஞானம், சக்தி முதலான குணங்கள் ஆகும்.

நீர்மலை நீர்வண்ணனை இரண்டு ஆழ்வார்கள் சொல் மாலைகளால் மங்களாசாசனம் செய்துள்ளனர். பூதத்தாழ்வார் போற்றிபாடிய பாடல்கள்

"பயின்றது அரங்கம், திருக்கோட்டி: பல்நாள்
பயின்றதுவும் வேங்கடமே; பல்நாள்பயின்றது
அணிதிகழும் சோலை அணிநீர் மலையே
மணிதிகழும் வண்தடக்கை மால்"[10] **(பகவத்தை கீதை** 4:11)

இந்த பாடலைக் கொண்டு கோயில்களில் அர்ச்சனை செய்து வருகின்றனார். திரு நீர்மலையும் மிகப் பழமையான திருப்பதி என்று கூறுவர். திருமங்கையாழ்வார் பல பாசுரங்களில் திருநீர்மலை எம்பெருமான் பற்றி பாடியுள்ளார்.

முடிவுரை

தொண்டை நாட்டு திருப்பதிகம் வைணவத்தில் - விஷ்ணுவை முழு முதற்கடவுளாகவும் ஆழ்வார்கள் பாசுரங்களைப் பாடிய பல நூல்கள் வாயிலாக தெரியவருகின்றது. தொல்லியல் துறையில் புதிதாக கிடைத்த விஷ்ணுவின் சிலையானது சுப்பாரெட்டிப்பாளையம் என்னும் ஊரில் கிடைத்துள்ளது போன்ற தவல்களையும் இந்த கட்டுரையின் மூலமாக தெரிய வருகின்றது. நீர்மலை நீர்வண்ணன் பெருமைகளை அழகுற எடுத்துரைக்கின்றது.

இந்நூல் வைணவ திருத்தலங்களை பற்றி அமைந்திருந்தாலும் பேராசிரியர் சைவ சமயத்தின் மீது கொண்ட ஈடுபாடு ஆங்காங்கேதுளிர் விட்டிருப்பதை காண முடிகிறது. ஏனெனில், இந்நூலில் சில இடங்களில் சைவ சமய வரலாறுகளும் ஆங்காங்கே அமைந்துள்ளன. இவ்வாறு ஒவ்வொரு தளத்தையும் நம் கண்முன்னால் காண்பது போன்ற உணர்வை ஆசிரியர் அமைத்துள்ளார். மேலும் நேரில் சென்று தரிசித்த உணர்வையும் தரிசிக்கவேண்டும் என்ற உணர்வையும் ஒருங்கே கொண்டு இந்நூல் சிறப்பாக அமைந்திருப்பதை அறிய முடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. முனைவர், ஏ. பரந்தாமன், பன்னிரு திருமுறை பெருமைகள், அஜந்த கிரஷ்பிக்ஸ், பதிப்பு: 2005.
2. ஆசிரியார், இரா. அழகுமலை, செந்தமிழ் திங்கள் இதழ், மதுரைத் தமிழ் சங்கம் மதுரை, வெளியீடு - 2014.

3. ந. சுப்புரெட்டியார், தொண்டைநாட்டு திருப்பதிகங்கள், அவ்வை பதிப்பகம், பதிப்பு: 2006.
4. கவிதா, திருக்குறள் பரிமேலழகர் உரை, கவிதா வெளியீடு, ஆண்டு - 2018.
5. ந. சுப்புரெட்டியார், தொண்டைநாட்டு திருப்பதிகங்கள், அவ்வை பதிப்பகம், பதிப்பு: 2006.
6. செந்தமிழ் அறிவியார் மருத்திதாசன், நாளும் ஒரு நாளாயிரம், நர்மதா பதிப்பகம் தி.நகர், சென்னை 600 017, முதல் பதிப்பு 2002,
7. முனைவர் சி.பி.சிங். இஆப. முனைவர். சி. வசந்தி, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, முதமை செயலாளர் (ம) ஆணையர், சென்னை 600 008. தொல்லியல் 2011. திருவள்ளுவர் ஆண்டு 2042.
8. ம. பெ. சீனிவாசன், திவ்விய பிரபந்தம், பாசுரத் தொகுப்பு, அன்னம் சிவகங்கை, வெளியீடு - 2010.
9. சுந்தார் கிடாம்பி, ஸ்ரீமதே ராமாநுஜாய நம
10. முனைவர். ஜோ. அருணாதேவி, வைணவத்தில் பக்திநெறி, முதற்பதிப்பு: ஆகஸ்டு - 2009.

REFERENCES

1. Dr.A. Paranthaman, Paniru Thirumurai Perumalka, Ajanta graphics Frist Edition: 2005.
2. Teacher. E.R. Azhagukumalai, Senthamil Thingal Magazine, Published by Madurai Tamil Sangam.
3. N. Suppurettiar, Thondai nattu thirupathikam, Avvai Publishing House, Edition: 2006.
4. Kavitha, Thirukural parimelazhagar urai, Kavitha publishing, Year - 2018.
5. N. Suppurettiar, Thondai nattu thirupathikam, Avvai Publishing House, Edition: 2006.
6. Senthamizh Aringyar Maaruthidasan, Naalum Oru Nalayiram, Narmada Publishing T. Nagar, Chennai 600 017, First Edition 2002,
7. Dr. C.P. Singh, Iba, Principal Secretary (m) Commissioner, Ph.D. C. Vasanthi, Archeology, Officer (P), Department of Archeology, Government of Tamil Nadu, Chennai 600 008. Edit - 2011 Thiruvalluvar, Year 2042.
8. M. B. Srinivasan, Divvya Prabandham, Basurath Synthesis, Annam Sivagangai, Publication - 2010.
9. Sundhir kidambai, Sri Madha niga, Manthamahathe, kayanama
10. Ph. D. Joe. Arunadevi, Vainava bhakthineri, First Edition, August - 2009.